# பத்திரிக்கை செய்தி

## லஞ்சம் கேட்டு பெற்ற கிராம நிர்வாக அலுவலர் கைது

விழுப்புரம் வட்டம் & மாவட்டம், அரியலூர் திருக்கை அஞ்சல், டட் நகர் கிராமத்தை சேர்ந்த திரு.அருளாந்து என்பவரின் மனைவி திருமதி.A.அன்னம்மாள், வயது 70/2023 என்பவர் 23.07.2023 ஆம் தேதியன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் எழுத்து மூலமாக கொடுத்த புகாரில் மனுவில், வாதி அன்னம்மாளின் மாமனார் மாணிக்கம் மற்றும் அவரது கணவரின் அண்ணனான சவரிமுத்து ஆகியோர் சுமார் 35 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டனர் என்றும், அப்போது அவர்களது இறப்பினை பதிவு செய்யவேண்டும் என்ற விபரம் தெரியாமல் விட்டுவிட்டதாகவும், தற்போது பூர்வீக சொத்து தொடர்பாக அவர்களின் இறப்பு சான்று தேவைப்பட்டதால் அவரது இளைய மகன் மைக்கேல் டிசோஸ் விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம், கடந்த 05.12.2020-ம் தேதி மாணிக்கம், சவரிமுத்து ஆகியோருக்கு இறப்பு சான்று கேட்டு தனித்தனியே மனுக்கள் கொடுத்ததாகவும், அதன் பேரில், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியரால் முறையாக விசாரணை செய்யப்பட்டதாகவும், பின்பு அவரது மகன் வேலை காரணமாக 26.05.2023-ம் தேதி அன்று வெளிநாட்டிற்கு சென்றுவிட்டதால் மேற்படி இறப்பு சான்று வாங்குவதற்கான வேலையை வாதி மேற்கொள்ளவதற்காக அரியூலூர் திருக்கை, கிராம நிர்வாக அலுவலர், சங்கீதா என்பவரை அவரது அலுவலகத்தில் சென்று பார்த்து மாணிக்கம், சவரிமுத்து ஆகியோரின் இறப்பினை ஆன்லைனில் பதிவு செய்வது சம்மந்தமாக கேட்டபோது, அதற்கு அவர் இருவரது இறப்பையும் ஆன்லைனில் பதிவு செய்யவேண்டியது நான் தான், மனுவ கொடுத்துட்டு கண்டுக்காம இருந்தா எப்புடி இங்க பணம் கொடுத்தால் தான் எந்த வேலையும் நடக்கும் என்று சொல்லி ஒவ்வொரு மனுவுக்கும் ரூபாய்.500/- வீதம் மொத்தம் ரூபாய்.1000/- கொடுத்தால் தான் மாணிக்கம், சவரிமுத்து ஆகியோரின் இறப்பினை நான் ஆன்லைனில் பதிவு செய்வேன் என்று கூறியதாகவும், அதற்கு வாதி பணத்தை தயார் செய்து கொண்டு வருகிறேன் என கூறிவிட்டு தனது வீட்டிற்கு வந்துவிட்டதாகவும், பின்னர் மேற்படி லஞ்சம் கொடுத்து இறப்பினை ஆன்லைனில் பதிவு செய்வதற்கு வாதிக்கும், வாதியின் மகனுக்கும் விருப்பமில்லை என்றும், மேற்படி மாணிக்கம், சவரிமுத்து ஆகியோரின் இறப்பினை ஆன்லைனில் பதிவு செய்வதற்கு ரூபாய்.1000/- லஞ்சமாக பணம் கேட்கும் அரியலூர் திருக்கை, கிராம நிர்வாக அலுவலர், சங்கீதா என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் படி தனது புகாரில் தெரிவித்துள்ளார். அதன்பேரில் அரியலூர் திருக்கை, கிராம நிர்வாக அலுவலர், சங்கீதா என்பவருக்கு எதிராக 24.07.2023-ந்தேதி குற்ற வழக்கு பதிவு செய்து அதன் தொடர்ச்சியாக பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொண்டு அரியலூர் திருக்கை, கிராம நிர்வாக அலுவலர், சங்கீதா என்பவர், அவரது அலுவலகத்தில் மனுதாரார் அன்னம்மாளிடம் லஞ்சமாக ரூபாய்.1,000/- கேட்டு பெற்றபோது கையும் களவுமாக பிடித்து கைது செய்யப்பட்டார்.